## தலைப்பு 308–தபால் திணைக்களம்

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தபால்திணைக்களத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் தபால்திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2022 மே 26 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் தபால்திணைக்களத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2022 யூலை 07 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து,நிதிக்கூற்றுக்கள் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான தபால் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பவற்றை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

### 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

நிதிக்கூற்றுக்கள், ஒட்டுமொத்தமாக மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தொடர்பில் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு அவற்றை பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்களின் மீது தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம், கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- திணைக்களத்தின் உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருந்தது என்றும்.

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) வருமான பெறுவனவுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருமானக் கூற்றிலுள்ள காசாக மீளளிக்கப்பட்ட ரூபா 6,801,869 மற்றும் வழுத் திருத்தம் ரூபா 18,493,453 ஆகியவற்றுக்கு அங்கீ காரம் வழங்கப்படாததுடன், மீளளி க்கப்பட்ட தொகையில் நாணய மாற்று வீதத்தின் மாறுபாட்டால் ஏற்பட்ட ரூபா 1,319,023 நட்டமும் உள்ளடங்கியிருந்தது. | அங்கீகாரம் வழங்கப்படாத மீளளிக்கப்பட்ட தொகையில் ஏற்பட்ட வேறுபாட்டிற்கான கார ணம் நாணயமாற்று வீத நட்டமும் மாவட்ட கணக்கள் அலுவலகத் தால் குறுக்குப் பதிவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட வழுத் திருத்தமும் ஆகும். | வருமான மீளளிப் புக்கு அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

**(ஆ) அரசாங்க உத்தியோகத்தர் முற்பணக் கணக்குகள் தொடர்பான கணக்கிணக்கக் கூற்று**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 02 மாவட்ட கணக்குகள் அலுவலகங்களின் தனிப்பட்ட கடன் மீதிகளின் மொத்தத்திற்கும் கட்டுப்பாட்டு கணக்கு மீதிக்கும் இடையே ரூபா 2,619,777 இனங்காணப்படாத வேறுபாடு காணப்பட்டது. | இனங்காணப்படாதுள்ள மீதிகளை இனங்காண்பதற்கும் இனங்காணப்பட்ட மீதிகளை தீர்ப்பதற்கும் தற்போது தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. | தனிப்பட்ட கடன் மீதிகளின் மொத்த த்திற்கும் கட்டுப்பா ட்டு கணக்கு மீதி க்கும் இடையே வேறுபாடு காணப்ப டக்கூடாது |
| (ii) | 05 ஆண்டுகளிற்கு மேற்பட்ட காலம் முதல் நிலவுகின்ற இனங்காணப்படாத கடன் மீதி ரூபா 1,515,466 தொகை கடன் மீதியில் உள்ளடங்கியிருந்தது. | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஏனையவற்றின் கீழ் காணப்பட்ட ரூபா 4,579,274 கடன் மீதியிலிருந்து ரூபா 3,063,808 கடன் மீதி 2021 ஆம் ஆண்டில் இனங்காணப்பட்டுள்ளதுடன், ஏனைய கடன் மீதியின் சரியான தொகுதியை இனங்காணப்தற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஆறவிடப்பட வேண் டிய கடன் மீதித் தொகுதியை வேறுப டுத்தி இனங்காண வேண்டும். |

**(இ) பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிருக்காமை**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி 2021 ஆம் ஆண்டில் இடம்பெற்றிருந்த 11 விபத்துக்களால் ஏற்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட ரூபா 2,078,400 நட்டம் மற்றும் பெறுமதி குறிப்பிடப்படாத 11 விபத்துக்கள் தொடர்பான தகவல்கள் இழப்புக்கள் மற்றும் கைதவிர்ப்புகள் கூற்றில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். ததன்மூலம் சுட்டிக் காட்டப்பட்டுள்ள வாகன விபத்துக்கள் 2022 இன் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்படும் என்பதை அறிவிக்கின்றேன். மேலும், நிகழ்வுகள் இடம்பெற்றவுடன் அவற்றை இழப்புக்கள் மற்றும் நட்டங்கள் பதிவேட்டில் உள்ளடக்குவதற்கு உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | நிதிக்கூற்றுக்களின் மூலம் நாளதுவரை யான சகல தகவல் களும் வெளிப்படுத்தப்ப டுதல் வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2009 ஆம் ஆண்டு முதல் நிலவுகின்ற ரூபா 14,000 உப கட்டுநிதி மீதியை தீர்ப்பதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நாளேட்டுப் பதிவின் மூலம் காண்பிக்கப்பட்டுள்ளமை சரியான தாகும். 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2009 ஆம் ஆண்டு முதல் நிலவுகின்ற மீதிகளை எதிர்காலத்தில் தீர்ப்பதற்கு நடவபடிக்கை எடுக்கப்படும். | உப கட்டுநிதி மீதிகள் ஒவ்வோர் ஆண்டின் இறுதியி லும் தீர்க்கப்படுதல் வேண்டும். |

### 2.2 வருமான முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஓராண்டுக்கும் மேற்பட்ட காலமாக நிலவு கின்ற ரூபா 101,393,616 நிலுவை வருமான மீதி மீளாய்வாண்டிலேனும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | சர்வதேச தபால் வருமானம் தொடர்பில் குறித்த ஆண்டில் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகளிலிருந்து பணம் கிடைத்திருக்காத கணக்கு மீதிகள் மாத்திரம் குறித்த ஆண்டின் நிலுவை வருமானத்தில் உள்ளடக்கப் படுகின்றது. அதன்படி பிந்திய ஆண்டுகளில் அங்கீகரிக்கப்பட்ட கணக்குகள், அந்தக் கணக்குகள் எந்த ஆண்டுகளிற்கு உரித்தானவையோ அதற்கமைய அந்தந்த ஆண்டுகளிற்கு உள்ளடக்கப்படுகின்றது. அது தபால் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்கு அப்பாற்பட்ட விடயமாகும். | நிலுவை வருமான த்தை அறிவிடுவத ற்கு முழுமையாக முயற்சித்தல் வேண் டும். |
| (ஆ) | மதிப்பிடப்பட்ட வருமானத்தி ற்கும் உள்ளபடியான வருமானத்திற்கும் இடையே 32 வருமான விடயங்கள் தொடர்பில் ரூபா 105,594 முதல் ரூபா 128,064,256 வரையான வீச்சில் சாதக முரண்களும் 13 வருமான விடயங்கள் தொடர்பில் ரூபா 191,430 முதல் ரூபா 66,078,495 வரையான | தபாலிடப்படுகின்ற கடிதங்கள் மற்றும் பொதிகளின் அளவு கொரோனா தொற்று நிலையிலும் எதிர்பார்த்த அளவைக் காட்டிலும் அதிகரித்திருந்தமை, நாணயமாற்று வீதத்தின் அதிகரிப்பு, தபால் முத்திரைகள், வருமான முத்திரைகளின் விற்பனை ஆண்டின் இறுதியில் எதிர்பார்த்த அளவிலும் பார்க்க அதிகரித்தமை,ஊயளா ழுெ னநடளைநசலசேவை பொது மக்கள் மத்தியில் துரிதமாக பிரபல்யம் பெற்றமை, சந்தைப்படுத்தல் | நிதிப்பிரமாணம் 50 இன் படி மதிப்பீட்டை முடிந்தளவு திருத்த மாக தயாரித்தல் வேண்டும். |

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| | வீச்சில் பாதக முரண்களும் காணப்பட் டன. | உத்திகள் மற்றும் விற்பனை மேம்படுத்தல்கள் அறிமுகப்படுத்தப்பட்டமை என்பன வருமானம் அதிகரிப்பதற்கான காரண ங்களாகும். கொரோனா தொற்றுக் காரணமாக அறிவிக்கப்பட்ட வருமானங்கள் அறவிடப்பட்டு வருகின்றன. வருமானக் குறியீடகள் மாற்றப்பட்டமை மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு சௌற்பாடு கள் தடைப்பட்டமை காரணமாக மதிப்பிடப்பட்ட வருமானங்கள் குறைவ டைந்திருந்தன. | |
| (இ) | மின்சார பட்டியல் கொடுப் பனவுகளை திணைக்களத் தின் ஊடாக செலுத்துகை யில் சாதாரண வழங்கல் களுக்குரிய மின் பட்டியல்கள் மாத்திரம் பொறுப்பேற் கப்பட வேண்டிய போதி லும், தபால் அலுவலகங் கள் மொத்த வழங்கல்களு க்குரிய ரூபா 37,293,337 பெறுமதியான மின் பட்டியல்களையும் ஏற்றுக் கொண்டிருந்தமை காரண மாக ரூபா 745,867 தரகு வருமானம் திணைக்களத் திற்கு இழப்பாகியிருந்தது. | மொத்த வழங்கல்களுக்குரிய மின் பட்டியல்களை பெறுப்பேற்க வேண்டாம் என 2012.07.31 ஆந் திகதிய Acct(op/epay/02a/2012 ஆம் இலக்க கடிதத்தினால் அவ்வப்போது தபால் திணைக்களத்தின் இணையதளத்தின் ஊடாக தபால் அலுவலகங்களிற்கு அறிவித்தல்கள் வழங்கப்பட்டன. இருப்பிரும், தபால் அலுவலகங்கள் அந்த மின் பட்டியல்களை தொடர்ந்தும் பொறுப்பேற்றிருந்தமையால் மீண்டும் தபால் அலுவலகங்களை அறிவுறுத்து வதற்கு நடவடிகச்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | சுற்றறிக்கை பிரகா ரம் செயற்படுதல் வேண்டும். |

## 2.3 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மிகை நிதி ஏற்பாடுகள் பெறப்பட்டிருந்தமை காரண மாக 06 மீண்டுவரும் செலவின விடயங்களிலும் 08 மூலதன செலவின விடயங்களிலும் ரூபா 378,886,076 நிதி ஏற்பாடு கள் சேமிப்பாகியிருந்தது டன், அது தேறிய நிதி ஏற்பாட்டில் 25 சதவீதம் | மேலதிகநேரம், பிரயாணச் செலவி னம் மற்றும் வெளிநாட்டு பயணச் செலவுகள் குறைந்திருந்தமை, கொவிட் நிலைமை காரணமாக கொள்வனவு நடவடிக்கைகளை பூரணப்படுத்த முடியாது போனமை, வழங்குநர்களின் தாமதம், சந்தை யில் உதிரிப்பாகங்கள் கிடைக் காமை, அமைச்சரவை தீர்மானத்தின் படி செலவுகள் நிறுத்தப்பட்டமை,சேவைக்கு வருகை | நிதிப்பிரமாணம் 50 இன் படி மதிப்பீட்டை திருத்தமாக தயாரித் தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | முதல் 97 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. | தருதல் மட்டுப்படுத்தப்பட்டமை, இறக்குமதிகள் தடைப்பட்டமை, நட்டங்களை பதிவழிப்பதற்கு அங்கீகாரம் பெற முடியாதிருந்தமை, நிர்மாண நடவடிக்கைகளில் காணப்பட்ட சிக்கல்கள் மற்றும் விலை மட்டங்கள் உயர்வடைந்தமை போன்ற விடயங்கள் இதன்மீது செல்வாக்கு செலுத்தியிருந்தன. | |
| (ஆ) | 02 செலவின விடயங்களிற்காக நி.பி. 66 இன் கீழ் மாற்றப்பட்ட ரூபா நிதி ஏற்பாட்டில் ரூபா 19,421,929 தொகை சேமிக்கப்பட்டிருந்தது. | தபால் திணைக்களத்தை பிரதிநிதித்துவம் செய்து மாநாடொன்றில் பங்குபற்றுவதற்காக மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்பட்ட செலவினம் குறைவடைந்தமை, கொவிட் 19 நிலைமை காரணமாக வழங்குநர்களின் தாமதம் மற்றும் பொருட்களின் தட்டுப்பாடு இந்த சேமிப்புக்கான காரணங்களாகும். | -மேற்படி- |

## 2.4 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளை ஏற்படுத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திறைசேரிக்கு அறிவிக்கப்பட்டரூபா 876,991 பொறுப்புகள் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | தவறுதலாக நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு (iii) இல் உள்ளடக்குவதற்கு முடியாது போயிருந்ததுடன் எதிர் காலத்தில் சரியாக குறிப்பிடுவதற்கு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | அனைத்துப் பொறுப் புகளும் நிதிக்கூற்று க்களில் வெளிப்படுத் தப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் இல் உள்ளவாறு பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள ரூபா 47,753,044 பொறுப்புகள் 2022 மார்ச் 10 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் இல் உள்ளவாறு பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டுள்ள பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் இது வரை தீர்க்கப்படாமைக்கான காரணம் போதியளவு நிதி ஏற்பாடு இன்மையும் பட்டியல்கள் சமர்ப்பிக் கப்படாமையும் ஆகும். | பொறுப்புகளை விரைவாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | 2021 திசெம்பர் இல் உள்ளவாறு ரூபா 13,144,156 தொகை,பொறுப்புகள் மற்றும் கடப்பாடுகள் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. | நாளதுவரையாக்குவதற்கு நடவடி க்கை எடுக்கப்படும் என்பதை அறியத்தருக்னிறேன். | அனைத்துப் பொறுப் புகளும் நிதிக்கூற்று க்களில் வெளிப்படுத் தப்பட வேண்டும். |

**2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளில் அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே பகுப்பாய்வு செய்து தரப்பட்டுள்ளது.

| | அவதானிப்பு | | | முகாமைத்துவக் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு** | **பெறுமதி** | **இணங்காமை** | | |
| (அ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையின் XXIV அத்தியாயத்தின் 4.5 ஆம் பிரிவு | 16,465,002 | கடன்பட்டோரிடமிருந்து அறவிட முடியாதுள்ள சந்தர்ப்பங்களில் பிணை தாரர்களிடமிருந்து அறவிடக்கூடிய 5 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட பழைய கடன் மீதிகள் காணப்பட்டன. | நிலுவையாகவுள்ள கடன் மீதிகளை அறவிடுவதற்கும் சட்ட ரீதியான நடவடிக்கை எடுப்பதற்கும் நடவடி க்கை எடுக்கப்பட்டுள்ளது. | தாபன விதிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக சுற்றறிக்கைகள் | | | | |
| (i) | 2016 திசெம்பர் 29 ஆந் திகதிய 30/2016 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | திணைக்களத்தின் எந்தவொரு வாகனத்திற்கும் எரிபொருள் பரிசோதனை செய்யப்பட்டிருக்கவில்லை. | தற்போது திணைக்களத்தின் வாகனங்களிற்கான எரிபொருள் பரிசோதனை செய்யப் பட்டு வருகின்றது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |
| (ii) | 2018 சனவரி 24 ஆந் திகதிய 02/2018 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | | ஓட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக் கைகள் கைச்சாத் திடப்பட்டிருக்கவில் லை. | ஓட்டுமொத்த பதவியணியினருக்கும் வருடாந்த செயலாற்றல் உடன்படிக்கைகளில் கைச்சாத்திடுவதற்கான படிவங்கள் அனுப்பப்பட்டுள்ளதுடன் அந்த நடவடிக்கைகள் பூரணப்படுத்திய பின்னர் அறிவிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 2.6 முற்பணங்களை வழங்குதல் மற்றும் தீர்த்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தில் 09 ஆண்டுகளிற்கு முன்னர் வெளிப்படுத்தப்பட்டிருந்த ரூபா 1,295,400 பெறுமதியான நிதி மோசடியிலிருந்து மீளாய்வாண்டின் இறுதி வரை ரூபா 1,145,850 தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | களுத்துறை மாவட்ட கணக்கு அலுவலகத்தின் நிதி மோசடி யுடன் தொடர்புடைய ரூபா 149,550 தொகை அறவிடப்பட் டுள்ளதுடன், இந்த மோசடி யுடன் தொடர்புடைய எஞ்சிய தொகையை இனங்காண்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றது. | திணைக்கள விசார ணைகளை முடிப்பத ற்கு நீண்டகாலம் எடுக்காது விசார ணைகளை முடிப்ப தற்கு துரித நடவ டிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ரூபா 55,091,707 மொத்தக் கடன் மீதிகள் காணப்பட்டதுடன், அதில் 05 ஆண்டுகளிற்கு மேலாக காணப் படுகின்ற ரூபா 27,304,345 தொகையினை அறிவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | 2022.03.31 இல் உள்ளபடி அதில் ரூபா 481,040 அறவிடப்பட்டுள்ளது. எந்த வொரு வழியிலும் அறவிட முடியாதுள்ள கடன் மீதிகளை பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | கடன் மீதிகளை அறிவிடுவதற்கு அதி கூடிய முயற்சி எடுக் கப்பட வேண்டும். |

## 2.7 வைப்பு மீதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2 ஆண்டுகளிற்கு மேல் பழமைவாய்ந்த ரூபா 4,001,595 பொது வைப்புக் கணக்கு மீதிகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 571(3) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இரண்டு ஆண்டுகளிற்கு மேற்பட்ட மீதிகளை அரசாங்க வருமானத் திற்கு எடுப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப்பிரமாணத்தின் படி நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 கொள்வனவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தபால் அலுவலகங்களின் பயன் பாட்டிற்காக ரூபா 1,689,750 பெறுமதியான 45 டொட் மெட்ரிக்ஸ் பிரின்டர்ஸ் கொள்வனவு செய்கை யில் 2.11.1(இ), 2.12, 5.3.1.(ஈ), 7.4.1. மற்றும் 8.8.1(அ) ஆம் வழிகாட்டல்களிலுள்ள கொள்வனவு வழிகாட்டல்கள் 2006 இன் பிரகாரம் செயற்பட்டிருக்கவில்லை. | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். எதிர்காலத்தில் அதன்படி செயற்படுவதற்கு குறித்துக் கொள்ளப்பட்டுள்ளது. | கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | ரூபா 1,680,400 பெறுமதியான 11 காற்றுச் சீராக்கிகளை சந்தை விலை ஒப்பீட்டு அடிப்படையில் கொள்வனவு செய்கையில் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 8.7.1(ஆ) மற்றும் 8.9.1(ஆ) பிரகாரம் உத்தரவாதக் கடிதங்கள் பெறப்ப டாததுடன் பொருள்/சேவை உடன் படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவு மில்லை. | எதிர்காலத்தில் உடன்படிக் கையில் கைச்சாத்திடுவதற்கும் இவ்வாறான நிலை ஏற்படுவதை தவரிப்பதற்கும் நடவடிக்கை எடுப்பேன். கோவிட் 19 நிலைமை இதற்கு தாக்கமளித் திருந்தது. | கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டில் பெ.சே.வ. உடன் சேர்த்து ரூபா 47,520,000 தொகைக்கு 50 தபால் முத்திரை பொறித்தல் இயந்திரங்களை கொள்வனவு செய்கையில் 2.14.1 ஆம் வழிகாட்டலுக்கு முரணாக விலை ஒப்பீட்டு முறை பின்பற்றப்பட்டிருந்தது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கின்றேன். காணப்பட்ட வரையறுத்த காலத்தை கருத் திற்கொண்டு 2020.09.23 ஆந் திகதிய 40 ஆம் இலக்க கொள்வனவுச் சபையின் தீர்மா னத்தின் படி கூறுவிலை கோரு வதற்கு அங்கீகாரம் பெறப்பட் டது என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படு தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | மீளாய்வாண்டில் பதுளை மாவட்ட கணக்குகள் அலுவலகத்தினதும் பிரதி தபால்மா அதிபர் அலுவலகத்தினதும் ரூபா 4,919,645 பெறுமதியான 06 கொள்வனவு நடவடிக்கைகள் அனை த்தும் பிரதேச செயலகங்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும், அந்தப் பணிகள் உரியவாறு மேற்கொள்ளப்பட்டிருந்தமை தொடர்பில் திணைக்களத்தினால் உறுதிப்படுத்தப்படுத்தல் பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், கொடுப்பனவுகளிலிருந்து உரிய பிடிகாசு பெறப்படாதிருந்ததுடன் அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்களின் 4.4.10(ஆ) வழிகாட்டலின் படி ரூபா 6,919,627 பெறுமதியான 07 கொள்வனவு நடவடிக்கைகளிற்காக செயலாற்றல் பிணைமுறிகள் பெறப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தில் போதியளவு தொழில்நுட்ப உத்தியோகத் தர்கள் இல்லாமையால் பிரதேச செயலாளர்களின் உதவி பெற்றுக் கொள்ளப்பட்டதுடன் செயற்திட்டமானது தபால் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் பிரதேச தபால் அத்தியட்சகர் ஆகியோரின் கண்காணிப்பின் கீழ் இடம்பெறுகின்றது. எதிர் கால கொள்வனவு நடவடிக்கை களின் போது திணைக்களத்தின் பொறியியலாளர் மற்றும் தொழில்நுட்ப உத்தியோகத்தர் களின் உதவியுடன் மேற்கொள் ளப்படுகின்ற செயற்திட்டங்களை அவர்களைக் கொண்டு கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | திணைக்களத்தி னால் செய்யப்படு கின்ற செலவினங் களின் பயனுறுதித் தன்மையை கண்காணிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (உ) | அரசாங்க கொள்வனவு வழிகாட்டல்கள் கோவையின் 8.9.1(ஆ) பிரகாரம் ரூபா 500,000 இற்கு மேற்பட்ட 6 பொட்கள் அல்லது சேவைகளின் வழங்கல் களுடன் தொடர்பில் முறையான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டங்களை மேற்கொள் வதற்காக பிரதேச செயலாளர் களிற்கும் தெரிவு செய்யப்பட்ட சங்கங்கள் மற்றும் கழகங்க ளிற்கும் இடையே உடன்படி க்கைகள் கைச்சாத்திடப்பட்டு ள்ளன. ஆகையால், தபால் திணைக்களத்திற்கும் குறித்த சங்கங்களிற்கும் இடையே உடன்படிக்கைகள் கைச்சாத்திட ப்படவில்லை. ஒரு செயற்திட்ட த்திற்காக தபால் திணைக்கள த்திற்கும் குறித்த சங்கத்திற்கும் இடையே உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டது. | கொள்வனவு வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்படுதல் வேண்டும். |

## 3.2 அரசாங்க உத்தியோகத்தர்களின் பிணை வைத்தல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1938 இன் 01 ஆம் இலக்க தபால் அலுவலக பிணை கள் கட்டளைச் சட்டத்தி ற்கு மேற்கொள்ளப்பட்ட 1978 இன் திருத்தத்தின் படி கட்டளைச் சட்டத்தின் 6(1) மற்றும் (2) ஆம் பிரிவு களின் பிரகாரம் அனுமதி வழங்கப்பட்டுள்ள செலவுக ளிற்கு மேலதிகமாக ரூபா 769,435 தொகை பல்வேறு சந்தர்ப்பங்களில் பிணை நிதியத்திலிருந்து செலுத்த ப்பட்டிருந்தது. | கணக்காளர் படி என்பது 2010 ஆம் ஆண்டு முதல் தபால் அலுவலக பிணைகள் நிதியத்திலிருந்து ஆளுகைச் சபையின் அனுமதியுடன் மாதாந்த கணக்குகளைத் தயாரித்தல், இறுதிக் கணக்குகளைத் தயாரித்தல் மற்றும் பிணைகள் நிதியத்தின் கணக்கு நடவடிக்கைகளை கண்காணிப்பதற்காக செலுத்தப்பட்ட படியாகும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | கட்டளைச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வாறு செயற்படுதல் வேண்டும். |
| (ஆ) | பிணைகள் நிதியத்தின் நடவடிக்கைகளிற்காகஸ்தா பிக்கப்பட்டுள்ள கணனி மென்பொதியின் அபிவிருத்திக்காக முன்னைய ஆண்டில் ரூபா 845,970 செலவிடப்பட்டிருந்த போதிலும்,அந்த கணனி முறைமை நாளதுவரையா க்கப்படவில்லை. | 2016.12.31 வரை தரவுகளை உள்வாங்குதல், மென்பொதியின் அபிவிருத்தி மற்றும் பரிசோதித்தல் நடவடிக்கைகளிற்காக ஆளுகைச் சபையின் அங்கீகாரத்துடன் குறித்த கொடுப்பனவுகள் செய்யப்பட்டுள்ளன. பதவியணியினரின் பற்றாக்குறை காரணமாக எதிர்காலத்தில் கணனி முறைமையை நாளதுவரையா க்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத்தரு கின்றேன். | செலவிடப்படும் தொகைக்கு பிரதி பலன் காணப்படுதல் வேண்டும். |
| (இ) | 16 மாவட்ட கணக்குகள் அலுவலகங்களிலுள்ள 2,366 ஊழியர்களின் 08 ஆண்டுகளிற்கும் மேற்பட்ட காலமாக தீர்க்கப்படாத பிணை வைப்பு மீதி ரூபா 4,706,739 ஆகும். | கணக்குகளிற்குரிய ஆட்களை இனங்காண முடியாதுள்ள மீதிகளே தபால் அலுவலக நிதியத்தின் செயற்பாடற்ற கணக்குகள் என வேறுபடுத்திக் காண்பிக்கப்பட்டுள்ளது டன் அந்த கணக்குகளை தீர்க்க முடியாதுள்ளது. | ஊழியர்கிள்குச் சொந்தமான நிதி களை அவர்களிற்குச் செலுத்தித் தீர்ப்பத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஈ) | 07 ஆண்டுகளிற்கும் மேலாக செயற்பாடற்றுள்ள கணக்குகள் நாளதுவரையாக்கப்படாதிருந்ததுடன், 1,828 உத்தியோகத்தர்களின் வட்டியற்ற ரூபா 2,098,122 பிணைப்பணம் மற்றும் 30 உத்தியோகத்தர்களின் விபரங்கள் அற்ற ரூபா 671,821 பிணைப் பணம் என்பன காணப்பட் டன. | அந்தப் பணிகளை நிறைவேற்றுவதற்குப் பொருத்தமான வேலைத் திட்டமொன்றை அமுல்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுக்குமாறு உரிய உத்தியோகத்தர்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். | செயற்பாடற்ற மீதிகள் தொடர்பான விபரங்கள் காணப்பட வேண்டுமென்பதுடன், அவற்றை உரியவர்களிற்குச் செலுத்துவதற்கு முடிந்தளவு முயற்சித்தல் வேண்டும். |

## 3.3 முகாமைத்துவ நலிவுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப அடிப்படை விசாரணைகளின் எண்ணிக்கை 2,156 ஆனதுடன், மீளாய்வாண்டின் 407 விசாரணைகள் அடங்கலான மொத்த விசாரணைகளிலிருந்து பூரணப்படுத்திய மற்றும் நீக்கப்பட்ட எண்ணிக்கை 584 ஆனமையால் எஞ்சிய விசாரணைகளின் எண்ணிக்கை 1,979 ஆகும். விசாரணை நடவடிக்கைகளின் நாளதுவரையாக்கப்பட்ட தகவல்கள் பொறுப்புவாய்ந்த உத்தியோகத்தர் ஒருவர் வசம் காணப்படவில்லை. | தற்போது ஆரம்ப விசாரணைகளிற்குரிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு விரிவான அறிக்கை யொன்று தயாரிக்கப்பட்டு வருவதுடன், அதற்கமைய, அந்த விரிவான அறிக்கையை எதிர் காலத்தில் கணக்காய்விற்கு துரிதமாக சமர்பிப்பதற்கு நடவடி க்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். | விசாரணை நடவடிக்கைகள் விரைவாக பூர்த்திசெய்யப்பட்டு அது தொடர்பான விபரங்கள் அடங்கிய அறிக்கை திணைக்களத்தினால் பேணப்படுதல் வேண்டும். |
| (ஆ) | காசுக் கட்டளைகள் கணக்கிணைக் கக் கூற்று<br>------------------------------<br>2013 முதல் 2018 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்ட காசுக் கட்டளைகளைக் காட்டிலும் ரூபா 2,192,592,952 மேலதிகமான தொகை CIGASநிகழ்ச்சித்திட்ட த்தின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன், 2013 முதல் 2015 ஆம் ஆண்டு வரை | எதிர்காலத்தில் திருத்தங்களை மேற்கொண்டு அது தொடர்பில் கணக்காய்விற்கு தெரியப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | தொடர்ந்தேற்சியாக நிலவுகின்ற இவ்வாறான வேறுபாடுகளை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்திய காசுக் கட்டளை களைக் காட்டிலும் ரூபா 2,352,149,235 மேலதிகமான தொகை CIGASநிகழ்ச்சித்திட்ட த்தின் மூலம் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | | |
| (இ) | பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் படி ரூபா 1,965,766 பெறுமதியான 9 முத்திரை உருப்படிகளில் மேலதிகங்களும் ரூபா 183,350 பெறுமதியான 10 முத்திரை உருப்படிகளில் பற்றாக் குறைகளும் காணப்பட்டன. அவ் வாறே நாரஹேன்பிட முத்திரைப் பிரிவில் ரூபா 2,184,000 பெறும தியான முத்திரைக் கையிருப்பு பற்றாக்குறையும் காணப்பட்டது. | பற்றாக்குறை மற்றும் மேலதிகங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன். ரூபா 2,184,000 முத்திரை பற்றாக்குறையை பதிவழிப்பதற்குத் தேவையான படிவங்கள் தயாரித்துச் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன், அமைச்சின் அங்கீகாரம் கிடைத்தவுடன் சேத நட்டங்களை பதிவழப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவித்துக் கொள்கின்றேன். | பற்றாக்குறை மற்றும் மேலதிகங்கள் தொட ர்பில் தேவையான நடவடிக்கை எடுக்க ப்பட வேண்டும். |
| (ஈ) | திணைக்களத்தினால் 2021 திசெம்பர் 31 ஆந் திகதி வரை முறையாக கையேற்கப்படாத தபால் அலுவலகங்கள் அமைந்துள்ள 421 காணிகள் காணப்பட்டன. | தபால் அலுவலகங்கள் அமைந் துள்ள காணிகளை முறையாக கையேற்பதற்கான நடவடிக்கை கள் துரிதமாக இடம்பெற்று வருகின்றன என்பதை தயவுடன் அறியத்தருகின்றேன். | தபால் அலுவலகங் களின் உரித்தினை உறுதிப்படுத்துதல் வேண்டும். |

## 4. மனிதவள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதித் தபால்மா அதிபர் பதவிக்கான அங்கீகரிக்கப் பட்ட பதவியணி எண்ணி க்கை 09 ஆன போதிலும், உள்ளபடியான எண்ணி க்கை 11 ஆனமையால் அங்கீகரித்த பதவியணியை விஞ்சி ஆட்சேர்க்கப்பட்ட எண்ணிக்கை 02 ஆகும். | பிரதித் தபால்மா அதிபர் பதவிக்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி எண்ணி க்கை 13 ஆவதுடன், பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் படி 02 உத்தியோகத்தர்கள் பிரதித் தபால்மா அதிபர் பதவிக்கான தகைமைகளைப் பெற்றிருந்தனர். வெற்றிடமான 02 பதவிகளிற்கு இலங்கை நிர்வாகச் சேவையிலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்கள் விண்ணப்பித்திரு க்காமையால் அந்த 02 | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல் லது அங்கீகரித்த ஊழியர் கோப்பை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | பதவிகளிற்கும் திணைக்களத்திலுள்ள தகுதிவாய்ந்த உத்தியோகத்தர்களை நியமிக்க வேண்டியிருந்தது. அதன்படி, பதவிய ணியினர் எண்ணிக்கை 11 ஆகியிருந்தமையை சுட்டிக் காண்பிக் கின்றேன். | |
| **(ஆ)** | திணைக்களத்தின் ஏனைய தரங்கள் மற்றும் சேவை களில் 2,164 வெற்றிடங்கள் காணப்படுவதுடன் சிரேஷ்ட மட்டத்திலுள்ள 62 வெற்றிட ங்களும் அதில் உள்ளடங் கியிருந்தது. அந்த வெற்றி டங்களை நிரப்புவதற்கு மீளாய்வாண்டிலேனும் நடவடிக்கை எடுக்கப்பட்டிரு க்கவில்லை. | துபால் சேவைகள் உத்தியோக த்தர் 1 ஆம் தரத்திற்கான அங்கீகரித்த ஊழியர் எண்ணிக்கை 876 ஆகும். பொது நிர்வாக சுற்றறிக்கை 06/2006 இன் படி தகுதிபெறுகின்ற அனைத்து ஊழியர்களிற்கும் பதவியுயர்வு வழங்கப்பட வேண்டுமென்பதால் அங்கீகரித்த பதவியணியினர் எண்ணிக்கையை விஞ்சி பதவியு யர்வு வழங்கப்பட்டுள்ளது.<br><br>சிரேஷ்ட மட்டத்திலுள்ள 75 சதவீதமான வெற்றிடங்களிற்கு ஆட்சேர்ப்பதற்கான நேர்முகப் பரீட்சைகள் இடம்பெற்றிருந்த போதிலும், நீதிமன்ற நடவடிக்கை காரணமாக இடைநிறுத்தப்பட்டுள் ளது. நிறைவேற்றுத் தரம் 111 இலுள்ள 18 பதவிகளிற்கு நேர்முகப் பரீட்சைகள் முடிவடை ந்து அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது.<br><br>சிரேஷ்ட தபால் அத்தியட்சகர் பதவியிலுள்ள வெற்றிடங்கள் தேவையான காலம் பூரணப்படுத் தப்படாமையால் நிரப்ப முடியாது ள்ளது. சேவைக்காலத்தை குறைப்பதற்குத் தேவையான அங்கீகார த்தை பெற்றுக் கொள்வதற்காக அமைச்சரவை விஞ்ஞாபனம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கு அல் லது அங்கீகரித்த ஊழியர் கோப்பை திருத்துவதற்கு நடவடிக்கை எடுத் தல் வேண்டும். |